**S.C. No.125/2018**

**எதிரிகள் 1, 2, 4 முதல் 8 வரை ஆஜர்.**

**சாட்சி பெயர்- மருத்துவர் திரு. நாகூர் மீரான்**

**தேதி-13.09.2024**

**அ.சா.12 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

28.07.2011 மாலை 8.40 மணிக்கு நான் தனலட்சுமி, க/பெ. முத்துராமன் என்பவரை பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தேனா என்றால் சிகிச்சை அளித்தேன். தனலட்சுமி என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார் என்றால் சரிதான். தனலட்சுமி என்பவர் தன்னை தெரிந்த இரண்டு நபர்கள் 28.07.2011 அன்று அருங்குணம் கிராமத்தில் நிலத்தில் தன்னை தலையில், முகத்தில், முதுகில், கையில் பின்விட்டம் ஆகிய இடங்களில் தாக்கினார்கள் என்று கூறினார் என்றால் சரிதான்.

தனலட்சுமி என்பவரை தாக்க மரக்கட்டை, கத்தி ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். தனலட்சுமிக்கு இடது பக்க முன்தலையில் 3 x 2 செ.மீ. அளவில் ஒரு வீக்க காயமும், வலது பக்க கன்னத்தில் 0.5 x 0.5 மி.மீ. அளவில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான். தனலட்சுமி என்பவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். தனலட்சுமி என்பவர் மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தனலட்சுமி என்பவருக்கு தலை காயத்திற்காக எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் தனலட்சுமிக்கு நார்மல் என அறிக்கை வந்தது. தனலட்சுமிக்கு நான் வழங்கிய காயச் சான்று ஏற்கனவே **எ.சா.ஆ.6-**ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

கன்னியம்மாள், க/பெ. மாரிமுத்து என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக 28.07.2011 மாலை 8.40 மணிக்கு அவரது கணவரும், சகோதரரும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தவரை நான் பரிசோதனை செய்தேனா என்றால் பரிசோதனை செய்தேன். கன்னியம்மாள் என்பவர் தன்னை தெரிந்த 11 நபர்கள் கட்டையாலும், கத்தியாலும் தலை, முகம், கை, உடம்பு ஆகிய இடங்களில் தாக்கினார்கள் என்றும், அதற்காக சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி கன்னியம்மாள் சுயநினைவில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் என்னிடம் சிறிது நேரம் மயக்க நிலையில் இருந்ததாக தெரிவித்தார், நான் பரிசோதித்த போது கன்னியம்மாள் சுயநினைவுடன் தான் இருந்தார்.

கன்னியம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் என்னவென்றால் தலையில் இடது பக்கம் வீக்க காயம் 3 x 2 செ.மீ. அளவிலும், நெற்றியில் 3 x 3 செ.மீ. அளவில் வீக்க காயமும், வலது பக்க கையில் 5 x 4 செ.மீ. அளவில் வீக்க காயமும், இடது பக்க கையில் 5 x 4 செ.மீ. அளவில் வீக்க காயமும், மற்றும் இடது பக்க கையில் 3 x 2 செ.மீ. அளவில் வீக்க காயமும் இருந்தது. கன்னியம்மாள் என்பவரை உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கன்னியம்மாளுக்கு எக்ஸ்ரே தலை மற்றும் கையில் எடுக்கப்பட்டது. கன்னியம்மாளுக்கு தலை மற்றும் கையில் எந்த எலும்பு முறிவும் இல்லை.

கன்னியம்மாளுக்கு தலையில் உள்பக்கமாக காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. நான் கன்னியம்மாளுக்கு வழங்கிய காயச் சான்று ஏற்கனவே **எ.சா.ஆ.7-**ஆக-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

28.07.2011 அன்று மாரிமுத்து என்பவரை நான் பரிசோதனை செய்தேனா என்றால் பரிசோதனை செய்தேன். மாரிமுத்து என்பவரை அவரது சகோதரர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி மாரிமுத்துவை 28.07.2011 அன்று மாலை 6.00 மணிக்கு அருங்குணம் கிராமத்தில் தன்னை தெரிந்த 11 நபர்கள் கத்தி மற்றும் மரக்கட்டையால் தலையில், முதகில், காலில் தாக்கியதாகவும் தனக்கு 1 மணி நேரம் சுயநினைவு இல்லாமல் இருந்ததாகவும் என்னிடம் கூறினார்.

நான் மாரிமுத்துவை பரிசோதனை செய்த போது அவருக்கு சுயநினைவு குறைவாக காணப்பட்டது. மாரிமுத்து என்பவரை பரிசோதித்த போது வலது பக்க தலையில் 5 x 1 x 1 செ.மீ. அளவு வெட்டுக்காயம் காணப்பட்டது. மற்றும் நெற்றியில் 4 x 1 x 2 செ.மீ. அளவில் வெட்டுக் காயம் காணப்பட்டது. இடது பக்க தோளில் சிறிய அளவில் வீக்க காயம் காணப்பட்டது. அவரை மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். மாரிமுத்து என்பவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு மேல்சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. மாரிமுத்து என்பவருக்கு நான் வழங்கிய காயச் சான்று ஏற்கனவே **எ.சா.ஆ.4**-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

28.07.2011 அன்று மாலை 8.45 மணிக்கு ராதா, த/பெ. மாரிமுத்து என்பவரை அவரது தந்தை, சகோதரருடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றால் சரிதான். ராதா என்பவர் 28.07.2011 அன்று மாலை 6.00 மணிக்கு அருங்குணம் கிராமத்தில் தன்னை தெரிந்த 11 நபர்கள் மரக்கட்டை கொண்டு தலையில், முதுகில் மற்றும் உடம்பில் தாக்கியதாகவும், தனக்கு 2 மணி நேரம் சுயநினைவில்லாமல் இருந்ததாகவும் கூறினார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். மேலும், வலது பக்க தலையில் 5 x 5 செ.மீ. அளவில் வீக்க காயம் காணப்பட்டது. வலது பக்க கன்னத்தில் கண்ணிற்கு கீழ் 5 x 3 செ.மீ. அளவில் வீக்க காயம் காணப்பட்டது. அவரை பரிசோதனைக்காவும், மேல்சிகிச்சைக்காகவும் செங்கல்பட்டு அரசு மருத்துவனைக்கு பரிந்துரை செய்தேன். அவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மேல்சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் ராதா என்பவருக்கு நான் வழங்கிய காயச் சான்று ஏற்கனவே **எ.சா.ஆ.5**-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

எ.சா.ஆ.4 முதல் எ.சா.ஆ.7 வரையிலான காயச் சான்றிதழில் சொல்லப்பட்டுள்ள காயங்கள் சொல்லப்பட்ட நேரத்தில் சொல்லப்பட்ட விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**<u>அரசு தரப்பு மறு விசாரணை-</u>**

தனலட்சுமி, கன்னியம்மாள், மாரிமுத்து மற்றும் ராதா ஆகியோர் ஒரே 108 ஆம்புலன்சில் தான் மருத்துவனைக்கு அழைத்து வரப்பட்டார்கள் என்றால் சரிதான். தனலட்சுமி என்பவரை தாக்க மரக்கட்டை, கத்தி ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளார்கள் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் தனலட்சுமி மற்றும் தனலட்சுமியின் உறவினர்கள் சொன்னார்கள். கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பிக்கவில்லை. அந்த கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தால் தான் தனலட்சுமிக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த கத்தி மற்றும் மரக்கட்டையால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

கன்னியம்மாள் என்பவரை தாக்க மரக்கட்டை, கத்தி ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளார்கள் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் கன்னியம்மாள் மற்றும் கன்னியம்மாளின் உறவினர்கள் சொன்னார்கள். கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பிக்கவில்லை. அந்த கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தால் தான் கன்னியம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த கத்தி மற்றும் மரக்கட்டையால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியும் என்றால் சரிதான். கன்னியம்மாள் என்னுடைய பரிசோதனையில் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான், கன்னிம்மாளுக்கு மயக்கம் ஏற்பட்டது என்று அவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சாதான்.

மாரிமுத்து என்பவரை தாக்க மரக்கட்டை, கத்தி ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளார்கள் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் மாரிமுத்து மற்றும் மாரிமுத்துவின் உறவினர்கள் சொன்னார்கள். கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பிக்கவில்லை. அந்த கத்தி மற்றும் மரக்கட்டையை என்னிடம் காண்பித்தால் தான் மாரிமுத்துவிற்கு ஏற்பட்ட காயங்கள் அந்த கத்தி மற்றும் மரக்கட்டையால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

தலையில் உள்காயம் இருந்தால் மயக்கம், வீக்கம் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் தெரியும் என்றால் சிலருக்கு உடனடியாக தெரியும், சில பேருக்கு தாமதமாக தெரியவரும். மாரிமுத்துவிற்கு தலையில் உள்காயம் இருந்தது என்பதை நான் எவ்வாறு தெரிந்துக்

கொண்டேன் என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக ஒருவரை ஒருவரை தாக்கிக் கொள்ளும் போது ஒருவர் தன்னிடம் வைத்துள்ள ஆயுதத்தினால் அவருக்கே காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Sujatha,
Additional Sessions Judge,
Fast Track Court, Arani.